MCOP.No. 71/2022

Date : 22.09.2025.

Witness Name & Rank – ஜின்ஸி - PW1

சாட்சி அழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. காவல் நிலையத்தில் விபத்து தொடர்பாக யார் புகார் கொடுத்தது என்றால் நான் தான் கொடுத்தேன். புகாரில் சொல்லி உள்ளது விவரங்கள் சரியானவை என்றால் சரிதான். எனக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். நானும் எனது பெரிய மகனும் வேலைக்கு சென்று வருகிறோம் என்றால் சரிதான். எனது சின்ன மகன் ஆழியார் டேமிற்கு நண்பர்களுடன் சுற்றுலா சென்றார் என்றால் சரிதான். சந்தோஷ் என்பவர் எனது மகனின் நண்பர் என்றால் சரிதான். மேற்படி சந்தோசத்திற்கு உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை எனது மகன் நண்பர்களுடன் மது போதையில் சந்தோஷ் பின்னால் உட்கார்ந்து சென்றதால் தான் விபத்து நடந்துள்ளது எனவே அந்த விபத்திற்கு எனது மகனின் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. மேற்படி சந்தோஷ் குமார் அவர்களுக்கு உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதாஎனது மகனின் கவனக்குறைவால் தான் விபத்து நடந்துள்ளதால் இரண்டாவது எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.
2. எனது மகனின் சம்பள சான்று தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான் எனது மகனின் இழப்பால் எனக்கு எந்த விதமான வருமான இழப்பும் எனவே நான் மிகைப்படுத்தி இழப்பீடு கோரியுள்ளேன் எனது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது மகன் கல்லூரியில் படிப்பதை காட்ட எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் ஆனால் ஆவணங்கள் எல்லாம் கல்லூரியில் உள்ளது. எனது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் தற்போது பொள்ளாச்சியில் குடியிருந்து வருகிறேன் விபத்தும் பொள்ளாச்சியில் தான் நடந்தது என்றால் சரிதான்.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.